பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 10 வியாழக்கிழமை (25-07-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 159

# ஓடும் ரயிலில் பெரும் குண்டு வெடிப்பு!

# தெகிவளையில் நேற்று 70 பேர் பலி!!

## ஐந்நூறுக்கும் அதிகமானோர் காயம்

கொழும்பு, ஜூலை 25

**கொழும்பு தெகிவளையில் நேற்று மாலை 6 மணியளவில், ஓடிக்கொண்டிருந்த ரயிலில் பெரும் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது. இக் குண்டு வெடிப்பில் எழுபது பேர் உயிரிழந்தனர்; ஐந்நூறுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.**

மருதானையிலிருந்து புறப்பட்டு அளுத்கம நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்த ரயிலில அலுவலக வேலை முடித்து வீடு திரும்பும் ஊழியர்கள் பெருமளவில் ஒன்று திரண்டு, நெருக்கியடித்துக் கொண்டு பயணம் செய்த போதே தெகிவளை அருகே அந்த ரயிலில் இரு குண்டுகள் வெடித்தன. இரண்டும் ஒரே சமயத்தில் வெடித்தன.

ரயில் மருதானையிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் ரயிலில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகப் பரவலாகத் தெரிவிக்கப்பட்டதாம் அதனையடுத்து ரயில் தெகிவளை அருகே நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டது.

அப்போது ரயிலில் குண்டொன்று கண்டு பிடிக்கப்பட்டு குண்டைச் செயலிழக்கச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தரையிறங்கு கலம் சேதம்

முல்லைத்தீவு முகாமை மீட்கும் நடவடிக்கையாக நேற்று முன் தினம் முகாமுக்குத் தொலைவில் துருப்புக்களை தரையிறக்கிக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா கடற்படையின் ''லாண்டிங் கிராவ்ட்'' ஒன்று புலிகளின் தாக்குதலில் சேதத்துக்குள்ளாகியிருக்கின்றது.

இந்த ''லாண்டிங்கிராவ்ட்'' விடுதலைப் புலிகளின் தாக்குதலில் சிறிய சேதத்துக்குவுள்ளானதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஆனால் இத்தாக்குதலில் கலம் முற்றாகச்சேதமடைந்ததாகவும் அதில் 22 படையினர் உயிரிழந்ததாகவும் விடுதலைப்புலிகள் அறிவித்தனர். அதனை நடவடிக்கைத் தலைமையகம் முற்றாக மறுத்துள்ளது. (உ-3-4-10)

## ரத்வத்தையை ராஜினாமா செய்யக் கோரி சுவரொட்டி

### கொழும்பு நகரச் சுவர்களில்

கொழும்பு, ஜூலை 25

முல்லைத்தீவுத் தாக்குதல் தொடர்பாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு எதிரான — சிங்கள மொழியில் எழுதப்பட்ட — சுவரொட்டிகள் கொழும்பு நகரப் பகுதி எங்கும் காணப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

''முல்லைத்தீவு முகாம் தோல்விக்கு யார் பொறுப்பு? ரத்வத்தையே இராஜினாமாச் செய்'' — என்ற வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகளே ஒட்டப்பட்டிருந்தன

நேற்று நாடாளுமன்றம் கூடவிருந்த சமயம் நாடாளுமன்றத்துக்குச் செல்லும் பிரதான வீதியின் இரு மருங்கிலும் இச்சுவரொட்டிகள் பெரும் எண்ணிக்கையில் ஒட்டப்பட்டிருந்தனவாம் (உ-3-10)

## செய்தியாளர் மாநாட்டில் பத்திரிகையாளர் கூச்சல்

கடந்த திங்கட்கிழமை இராணுவத் தலைமையகத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பத்திரிகையாளர்கள் கூச்சலும், சத்தமுமிட்டனர் என்று அரசு சார்புப் பத்திரிகை ஒன்றில் பணிபுரியும் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் தொடர்பாகவே இச்செய்தியாளர் மாநாடு கூட்டப்பட்டது என்பது தெரிந்ததே.

''முல்லைத்தீவு குறித்து பல்வேறு தகவல்கள் வெளியாகின்றன; உண்மையான தகவல்களை எங்களுக்குத் தாருங்கள்; உண்மையான தகவல்களை நாம் வெளியிட உதவுங்கள். லண்டனில் உள்ள விடுதலைப் புலிகள் அலுவலகம் கூட பலதரப்பட்ட தக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சகல கடைகளிலும் விலைப்பட்டியல் கட்டாயம்

### அரச அதிபர் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 25

உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்கள், ஏனைய பாவனைப் பொருள்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும் சகல வர்த்தக நிலையங்களிலும் விலைப்பட்டியல் வைக்கப்படவேண்டும்.

பாவனைப் பொருள்களின் விலையேற்றத்தைத் தடுப்பது குறித்து ஆராய்வதற்காக நேற்றுச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் இந்த உத்தரவை விடுத்தார்.

அத்தியாவசிய மற்றும் பாவனைப் பொருள்கள் இடத்துக்கு இடம் வெவ்வெறு விலைகளுக்கு விற்பனை செய்யப்படுவது, அவை அதிக விலைக்கு விற்கப்படுவது என்பன குறித்து நேற்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

கொழும்பிலிருந்து பொருள்களை இங்கு தருவிக்கும் வர்த்தகர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கொழும்பில் இருந்து பொருள்களை எடுத்துவருவதற்குத் தாம் கூடுதலான கட்டணம் செலுத்துவதாகவும்— கொழும்பில் கப்பலில் ஏற்றப்படும் பொருள்கள் [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு ராணுவ முகாம் சூழலில் நேற்று கடும் சண்டை மூண்டது

கொழும்பு, ஜூலை 25

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும் முல்லைத்தீவு இராணுவ முகாமின் சூழலில் ஏழாவது நாளாக நேற்று விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படைகளுக்கும் இடையில் கடும் சமர் இடம்பெற்றது.

முகாமை மீட்பதற்காக அப்பகுதியில் தரையிறக்கப்பட்டுள்ள மேலதிக விசேட படைகள் புலிகளின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் முகாமை நோக்கி முன்னேறி, முகாமின் சூழலை அண்மித்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி அறிவித்தது.

நேற்று முன்தினம் ஸ்ரீலங்காப் படைகள் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சந்திக்க நேரிட்டது என்றும்—

புலிகள் படையினர் மீது மோட்டார் குண்டுத் தாக்குதல்களை நடத்தினர் என்றும் —

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

படையினர் நடத்திய பதில் தாக்குதலில் புலிகளுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டதாகவும் அது குறிப்பிட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சண்டையில் ஓர் அதிகாரியும், ஆறு இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர் என்றும் —

காயமுற்ற அதிகாரி ஒருவரும் 48 படையினரும் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு அனுப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியைப் பேணுமாறு சந்திரிகா நாட்டு மக்களுக்கு விசேட அழைப்பு

கொழும்பு, ஜூலை 25

தென்னிலங்கையில் அமைதியை நிலைநாட்டி, அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புத் தருமாறு ஜனாதிபதி மக்களைக் கேட்டுள்ளார்.

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதல், தெகிவளை ரயில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஆகிய இரண்டையும் தொடர்ந்து ஜனாதிபதி, நேற்றிரவு மக்களுக்கு விசேட செய்தி ஒன்றை விடுத்தார்.

ஜனாதிபதியின் செய்தியின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

விடுதலைப் புலிகள் இவ்வாறான தாக்குதல்கள் மற்றும் குண்டு வெடிப்புகள் மூலம் நாட்டின் தென்பகுதியில் கலவரங்களை ஏற்படுத்தி அதன் மூலம் வடபகுதியில் உள்ள இராணுவத்தினரின் கவனத்தை அதன் பால் ஈர்க்க முனைகின்றனர்.

அதே போல, இத்தகைய செயல்களால் சிங்கள மக்களின் [illegible] தூண்டி மீண்டும் ஒரு கறுப்பு ஜூலையைத் தோற்றுவிப்பதே அவர்களின் நோக்கம்.

தமிழர் எதிர்ப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது என்று சர்வதேச அரங்குக்கு எடுத்துக் காட்டி அபகீர்த்தியை உண்டாக்குவதும் அவர்களின் நோக்கமாகும்,

இவ்வாறான மக்கள் விரோத சதிகார நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. விவகாரத்தால் நாடாளுமன்றில் குழப்பம்

கொழும்பு, ஜூலை 25

முல்லைத்தீவுத் தாக்குதல் குறித்து உண்மை விவரத்தை வெளியிடுமாறு கோரி எதிர்க்கட்சியினர் நேற்று நாடாளுமன்றில் கூச்சல் குழப்பமிட்டனர்.

இராணுவ முகாம் மற்றும் அங்கிருந்த படையினரின் தலைவிதி ஆகியவை பற்றி தெளிவான விவரங்களைத் தெரிவிக்குமாறு எதிர்க்கட்சியினர் மீண்டும் மீண்டும் கோரியபோதே சபையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

### ரணில் பேச்சு

முல்லைத்தீவில் இன்று பாரிய யுத்தம் நடைபெறுகிறது. இது பற்றிய உண்மை விவரங்களை அரசு அமைச்சரவைக்கும், நாடாளுமன்றத்துக்கும், மக்களுக்கும் வெளியிடவில்லை.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது சேர்ச்சில் யுத்த விவரங்களைப் பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு அறியத்தந்தார்.

இந்திய - சீன யுத்தத்தின் போது இந்தியாவின் பின்னடைவைப் பிரதமர் நேரு நாடாளுமன்றத்துக்கு அறியத் தந்தார்.

ஆயினும் இங்கு நடக்கும் யுத்த நிலை குறித்து பொது

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ/து)

# பதவிகள் வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**01. பொதுமுகாமையாளர் 165/88 - 7**

சம்பளம்:

1505 – 75x6 – 100x6 – 2555
(புதிய சம்பளத்திட்டம்)
இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்

கல்வித் தகைமைகள் :

அ) கூட்டுறவுப் பணியாளர் 8வது சம்பளத்திட்டத்தில் மூன்று வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9வது சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்தில் ஆறு வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரி தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனத்தில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவமுள்ளவர்.

அல்லது

இ) கூட்டுறவுப்பணியாளர் தராதரம் (உயர்தரம்) அல்லது க. பொ. த (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனத்தில் முகாமை மட்டத்திலான எட்டு வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவமுள்ளவர்.

**02. கணக்காளர் 165/88 — 09**

சம்பளம்

1105 - 60 X 4 - 75 X 11 - 2170
(புதிய சம்பளத்திட்டம்)
இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

கல்வித் தகைமைகள்:-

அ) கூட்டுறவுப் பணியாளர் 10 வது சம்பளத் திட்டத்தில் கணக்காளர் / கணக்காய்வாளர் பதவியில் மூன்று வருடங்களுக்குக் குறையாது வேலை செய்த அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11 வது சம்பளத்திட்டத்தில் கணக்காய்வாளர் / கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ளவர்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்கு பதிவாளர் கல்வி நிலையத்தின் இறுதிப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனத்தில் கணக்காய்வாளர் / கணக்காளர் / மேற்பார்வையாளர் மட்டப் பதவியில் வேலை செய்த நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ளவர்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) அல்லது க.பொ. த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட 3 பாடங்களுடன் கணக்காளர் / கணக்காய்வாளர் / மேற்பார்வை மட்டப்பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத வேலை செய்த அனுபவமுள்ளவர்.

**03. வர்த்தக முகாமையாளர் 165/88—09**

சம்பளம்:

1105 — 60 x 4 — 75 x 11 — 2170
(புதிய சம்பளத்திட்டம்)
இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்

கல்வித்தகைமைகள்:-

அ) கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 08 வது சம்பளத்திட்டத்தில் மேற்பார்வைப் பகுதியில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது 09 ஆவது சம்பளத்திட்டத்தில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன் சந்தைப்படுத்தல், வழங்கல், பொருள் ஏற்றுமதி, இறக்குமதி, துறையில் ஒன்று அல்லது மேற்பட்ட பதவியில் இருவருடகால மேற்பார்வை அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுத் தராதர (உயர்தரம்) அல்லது க. பொ. த. (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியும் சந்தைப்படுத்தல், வழங்கல், பொருள் ஏற்றுமதி, பொருள் இறக்குமதி எனும் துறையில் ஒன்று அல்லது மேற்பட்ட பதவியில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை:

**18 — 40** வருடங்கள்
(கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. இவர்கள் விண்ணப்பப் படிவத்தினை தங்கள் சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களுடன் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியினை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதி தலைவர், யாழ்மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இல 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 10-08-96ந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

(சி-2671)

## உடன் சந்திக்கவும்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றும் பொது சுகாதார பரிசோதகர் T. மகாதேவா என்பவரை, (யாழ். நாயன்மார்கட்டைச் சேர்ந்தவர்) எமது கடையின் முக்கிய அலுவல் ஒன்று சம்பந்தமாக உடன் சந்திக்குமாறு வேண்டுகின்றோம்.

நேசம் அழகு நகை
சாவகச்சேரி.

(சி/2672)

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## இராஜேஸ்வரி சண்முகநாதன்

வீமன்காமம், தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சண்முகநாதன் 17 - 07 - 96 (புதன் கிழமை) அன்று மல்லாவியில் காலமாகி விட்டார்.

இவர் திரு. வே. சண்முகநாதன் (பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும், விஷ்ணுகாந்தன் (கண்ணன்)U.K. அவர்களின் அன்புத் தாயாரும், வீமன்காமத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், இராசம்மா தம்பதிகளின் அன்புமகளும், சங்குவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, திருமதி வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், திருமதி அ. பரமேஸ்வரி, காலஞ்சென்ற யோ. சுந்தரேஸ்வரி, சண்முகதாசன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்) முருகதாஸ் (அரச நில அளவையாளர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18 - 07 - 96 (வியாழக்கிழமை) அன்று மல்லாவியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
வ. முருகதாஸ்
(சகோதரன்)

''வசந்தவில்லா''
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(41943)

## இரத்தினசிங்கம் சிவயோகமலர்

புங்கங்குளம் வீதியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சிவயோகமலர் 23 - 7 - 96 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகி விட்டார். இவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும், யோகேஸ்வரன் (கொழும்பு), பத்தா (லண்டன்), வசி (லண்டன்), விக்கி (லண்டன்). கண்ணன் (லண்டன்), பாப்பு (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. சிறிதரன்

101/2 ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(41951]

## வல்லிபுரம் சின்னத்துரை

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் சின்னத்துரை காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளையின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன், இராமச்சந்திரன், (டென்மார்க்), சர்வானந்தம், மகாதேவன் (ஜேர்மனி) அகிலகுமாரி (சுவிஸ்), செல்வச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், புனிதவதி, மணி (டென்மார்க்), சாந்தா, சயிலா (ஜேர்மனி), பூலோகசிங்கம் (சுவிஸ்), சோபனா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், ஜெயபாலன் (ஜேர்மனி), ஜெயகௌரி, ஜெயகிருஸ்ணா (கிரிசா), பவானி, பாமினி, பிறேமினி, குமுதினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (25-7-96) வியாழக்கிழமை காலை 11 மணிக்கு (பழைய நேரம்) எருளன் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சி. பாலச்சந்திரன்
சி. சர்வானந்தம் (கிளி)
(மகன்மார்)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(41954)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வு புனித சந்தான மாதா ஆலய வருடாந்த திருவிழா கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலி பூசை ஒப்புக்கொடுத்தலும் விஷேட ஆராதனை வழிபாடு நடத்தலும் நடைபெறும். (அ-30)

## பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

ஓடிக்கொண்டிருந்த லாண்ட் மாஸ்டரில் இருந்து தவறி விழுந்த பெண் ஒருவர் காயமடைந்தார்.

திருநெல்வேலி, பிரதானவீதி பரமேஸ்வரா சந்திக்குச் சமீபமாக நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் வேலணையில் இருந்து இடம்பெயர்ந்து திருநெல்வேலியில் வசிக்கும் துரைராசா மகாலக்ஷ்மி (வயது 55) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## கட்டடம் இடிந்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் ஜூலை 25

கடந்தகால இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்திருந்த கட்டடம் ஒன்றின் கீழ் நின்றவர் கட்டடம் ஒன்று உடைந்து விழுந்ததால் தலையில் காயமடைந்தார்.

யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம் பெற்றது.

கொட்டடியைச் சேர்ந்த பீலிப் மரியநாயகம் (வயது 35) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## மூளாய் - யாழ் மினிபஸ்கட்டணம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணம் — மூளாய் மினிபஸ் பயணிகளிடம் இருந்து முன்னர் போலவே கூடிய அளவு கட்டணம் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் — அதாவது எரிபொருள் விலை அதிகரித்திருந்த போது — 40 ரூபா அறவிடப்பட்டதாகவும் —

அதே தொகையே தற்போதும் அறவிடப்படுவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர். (இ-15)

## சலுசல துணிகளை அனுப்பும்

கொழும்பு, ஜூலை 25

ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான துணிகளை ஏற்றிய கப்பல் ஒன்றினை இம்மாதம் முடிவதற்குள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கு சலுசல நடவடிக்கை எடுத்துள்ளது.

சலுசலவின் தலைவர் எச். சி. சுபனே தமது அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இந்த துணிவகைகளுடன் வெள்ளைக் காற்சட்டைகளும், சட்டைகளும் மற்றும் நீளக்காற்சட்டைகளும், அதற்கான துணி வகைகளும், டெனிம் காற்சட்டைகளும் எடுத்துச் செல்லப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா மீதும் சசிகலா மீதும் கிரிமினல் வழக்கு விரைவில் தாக்கல்

## லஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவு அறிவிப்பு

சென்னை ஜூலை 25

தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கும், அவரது நெருங்கிய தோழியான சசிகலாநடராஜனுக்கும் எதிராக கிரிமினல் வழக்கு தாக்கல் செய்யப்படவிருப்பதாக சென்னை லஞ்ச ஊழல் தடுப்பு பிரிவினர் நேற்று அறிவித்துள்ளனர்.

''டான்ஸி'' நிறுவனத்திடம் இருந்து சர்ச்சைக்குரிய நிலத்தை வாங்கியமை தொடர்பாகவே இந்த வழக்கு தொடரப்படவிருக்கிறது.

இந்த நிலத்தை நீதிமன்றம் பொறுப்பேற்கும்படி சென்னை பெருநகர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு ஒன்றை கடந்த வாரம் பிறப்பித்திருந்தது தெரிந்ததே.

அதே சமயம் அந்நிய செலாவணிமோசடி வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டுச் சிறையில் இருக்கும் திருமதி சசிகலா நடராஜனின் பிணை மனு மீதான விசாரணையை சென்னை உயர் நிதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

இம்மனு மீதானவிசாரணை நடந்த போது அமுலாக்கல் பிரிவு பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் கோரியதை யடுத்து விசாரணையை நீதிபதி ஒத்தி வைத்துள்ளார். (இ-3)

# புலிகளைச்சாட்டி எனது அரசைக் கலைக்க முயற்சி

## கருணாநிதி குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 25

'தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாகக் கூறி மீண்டும் எனது அரசைக் கலைக்க முயற்சிப்போரின் ஆசை ஈடேறாது.'

மேற்கண்டவாறு முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று திட்டவட்டமாகக் கூறினார்.

விடுதலைப் புலிகள் தமிழகத்தில் நுழையாமல் இருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை சமீபத்தில் சென்னையில் தம்மைச் சந்தித்த மத்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவிடம் தாம் விளக்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

பேரவையில் பிரச்சினையை கிளப்பிய அ. தி. மு. க.உறுப்பினர் தாமரைக் கனி விடுதலைப்புலிகளை கட்டுப்படுத்தும் விடயத்தில் மத்திய அரசுக்கு மாநில அரசு ஒத்துழைப்புத்தரவில்லை என்று உள்துறை அமைச்சர் கூறியதாகக் குற்றம் சாட்டினார்.

# இஸ்ரேல்- பலஸ்தீன பேச்சுக்கள் தொடரும்

பலஸ்தீனத்துக்கும், இஸ்ரேலுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை முன் எடுத்துச் செல்ல உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகப் பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

சென்ற மே மாதத்தில் இஸ்ரேலிய தேர்தல் நடைபெற்ற பின்னர் இரு தரப்புத் தலைவர்களும் சந்தித்தது இதுவே முதல் தடவையாகும்.

மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதென இருதரப்பும் உடன்பட்டுள்ளன.

இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் டேவிட் லெவியும பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத்தும் இப்பேச்சில் பங்கெடுத்தனர். (இ-3)

**உலக அரங்கில்**

## பாதுகாப்புக் குறைவே காரணம்

கடந்த திங்கட்கிழமை லாகூர் விமான நிலையத்தில் குண்டு வெடிப்பு இடம்பெற்றமைக்கு பாதுகாப்புக் குறைவே காரணம் என தற்போது தெரிவிக்கப்பட்டது,

அமெரிக்க புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர் இது குறித்து நேரடி விசாரணையை ஆரம்பித்துள்ளார்.

விமான நிலையத்துற்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (இ-3)

## ஆப்கானில் சமாதான முயற்சி

நியூயோர்க், ஜூலை25

ஆப்கானிஸ்தானில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியாக ஐ.நா வின் புதிய தூதுவர் றெபெட் ஹெல் கராச்சி சென்றுள்ளார்.

# யாங்ஸி நதி பெருக்கெடுப்பு வெள்ளத்தில் 40லட்சம் பேர்

## 80 லட்சம் பேர் நிவாரணப் பணியில்

பீஜிங், ஜூலை 25

சீனாவின் மிக நீளமான யாங்ஸி நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருப்பதாகவும் — இதனால் 8 லட்சத்து 10 ஆயிரம் வீடுகள் தரைமட்டமாகி உள்ளதாகவும்— 28 லட்சம் வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

40 லட்சம் மக்கள் வெள்ளத்தால் சூழப்பட்டு பெருநிலப்பரப்புடன் தொடர்பில்லாது இருக்கிறார்க்ள்.

நிலைமை இன்னும் மோசமடையாதபடி இராணுவமும், மற்றும் தொண்டர்களுமாக 80 லட்சம் பேர் நிவாரணப் பணிகளிலும், முன்பாதுகாப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். (இ-3)

# பூட்ரஸ் பூட்ரஸ் காலியை மீண்டும் தேர்ந்தெடுப்பதற்கு ஐ.நா. நிதி?

## விசாரணை வேண்டும் என்கிறது அமெரிக்கா

புதுடில்லி, ஜூலை 25

ஐ. நா. தலைமைச் செயலர் பூட்ரஸ் பூட்ரஸ் காலியை மீண்டும் அந்தப் பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கான பிரசாரத்துக்காக ஐ. நா. வின் நிதியும், அதிகாரிகளும் பயன்படுத்தப்படுவதாக கூறப்படுவது குறித்து விசாரணை செய்யப்படவேண்டும் என்று அமெரிக்க நிர்வாகம் கேட்டுள்ளது.

பூட்ரஸ் பூட்ரஸ் காலி மீண்டும் 2 ஆவது பதவிக்காலத்தில் பணியாற்றுவதற்கான முயற்சிகளை அந்த அமைப்பில் உள்ளவர்கள் ஊக்குவித்து வருவதாக ஐ. நாவில் உள்ள அமெரிக்கா அதிகாரி தெரிவித்தார்.

அவரது பதவிக் காலம் இவ்வாண்டு முடிவுக்கு வருகிறது.

ஐ. நாவின் நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா, பிரான்ஸ் மற்றும் ரஷ்யாவும் பூட்ரஸ் காலிக்கு ஆதரவு தர இருக்கையில் அமெரிக்கா அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதை தடுக்க தனது ரத்து அதிகாரத்தை பயன்படுத்தப்போவதாக அச்சுறுத்தியுள்ளது.

பிரிட்டனோ மதில் மேல் பூனை நிலையில் இருந்து வருகிறது.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய ஐந்து நாடுகளும் ஐ நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## சந்தனக்கட்டை கடத்தல்

சென்னை, ஜூலை25

சந்தனக்கட்டை கடத்தலுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 14 வனத்துறை அலுவலர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் இருந்து டில்லிக்கு அனுப்பப்பட்ட இரண்டரை கோடி ரூபா பெறுமதியான சந்தனக்கட்டைகள் வழியில் பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாம். (இ-3)

# கடும் விமர்சனத்துக்கு உள்ளாகிவரும் அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகள்

அட்லாண்டா, ஜூலை 25

இந்த நூற்றாண்டில் சிறந்த ஒலிம்பிக்காக வரலாற்றில் நிற்கும் என எதிர்பார்க்கப்பட்ட அட்லாண்டா ஒலிம்பிக் போட்டி தொடங்கி 2 ஆம் நாளில் இருந்தே கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகி மோசமான ஒலிம்பிக்ஸ் எனப் பெயர்வாங்கி நிற்கிறது.

மேற்கண்டவாறு வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

அமெரிக்கர்களின் அமெரிக்க வெறி ஒவ்வொரு கட்டத்திலும் வெளிக்காட்டப்படுவதை ரஷ்ய, சீனப்பத்திரிகைகள் சாடியுள்ளன.

போக்குவரத்து சீரழிவு, பொதுவான நிர்வாகக் கோளாறுகள் ஆகியவற்றை பெரும்பான்மை நாட்டுப் பத்திரிகைகள் முதல்பக்கச் செய்தியுடன் விமர்சித்துள்ளன.

பெல்சியம் நாட்டு தொலைக்காட்சி அட்லாண்டா ஒலிம்பிக்கை இந்த நூற்றாண்டின் பெரும் குழப்பம் என வர்ணித்துள்ளது.

போட்டி தொடர்பான முடிவுகளை வெளியிடும் கணணிகள் சரியாக இயங்காததால் முடிவுகள் பிழையாக அறிவிக்கப்படுவதாகவும் —

போக்குவரத்து நெரிசல்கள் காரணமாக பல போட்டியாளர்கள் தமது போட்டிகளில் பங்குபற்ற முடியாமல் போவதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

பெரும் குழப்பமும், கலாட்டாவும் நிறைந்தது இந்த ஒலிம்பிக் போட்டி என்று செய்தி ஏஜென்ஸிகள் வர்ணித்தன.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# ஆயுதப் போராட்டமே அரசை தீர்வு ஒன்றுக்கு இட்டுச் சென்றது

## 'சரிநிகர்' ஆசிரியர் தெரிவிப்பு

கொழும்பு ஜூலை 25

ஜனநாயக வழியில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் போராட்டங்களும் ஆட்சியில் இருந்த அரசுகளால் ஒடுக்கப்பட்டன. ஆனால் தற்போதைய ஆயுதப் போராட்டம் அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டிய தேவையை அரசுக்கு உருவாக்கியுள்ளது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ''சரி நிகர்'' வார இதழின் ஆசிரியர் எஸ். பாலகிருஷ்ணன் செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண 3 சக்திகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அதாவது அரசாங்கம், முக்கிய எதிர்க்கட்சியான ஐ. தே. க. மற்றும் விடுதலைப் புலிகள் ஆகியனவே அந்த சக்திகளாகும்.

இந்த மூன்று சக்திகளும் ஒன்றுக்கொன்று நம்பிக்கை வைக்க வேண்டும். மேலும் பேச்சுவார்த்தையில் நிபுணத்துவமுடைய ஒரு நாட்டின் அல்லது நிறுவனத்தின் மேற்பார்வையிலேயே பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப் படவேண்டும்.

இதைவிட பயனுடைய மாற்று வழிகள் வேறு இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. இப்படி—திரு பாலகிருஷ்ணன் மேலும் தெரிவித்தார். (இ 10)

## பல்கலைக்கழக மாணவர் கூட்டம்

மூன்றாம் வருட (91-92 கல்வி ஆண்டு) கலைப்பீட மாணவர்களுக்கான கூட்டம் நாளை 26 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

இராமநாதன் நுண்கலைப் பீட புதுமுக மாணவர்கள் உட்பட சகல ஆண்டு மாணவர்களுக்குமான விசேட பொதுக் கூட்டம் நாளை 26 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி அளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

# மரங்களை அழியாதீர்

மரம் தான் எல்லாம் மரந்தான்
மறந்தான் மனிதன் மறந்தான்

என்பதனைக் கவிஞர் வைரமுத்துவின் கவிதையில் மட்டும் காணவில்லை.

தற்பொழுது யாழ்ப்பாணக் குடாநாட்டின் வயல்வெளிகளில், வீதி ஓரங்களில், பொதுஇடங்களில் மக்களுக்கு அநாதரவாக நின்ற நிழல்தரு மரங்கள் பல விறகுக்காகவும், விற்பனைக்காகவும் அடியோடு சாய்த்து வீழ்த்தப்பட்டுள்ளன.

**திருமுகம்**

குறிப்பாக சரசாலை — துன்னாலை வீதி, மண்டான், முள்ளி, விராலி போன்ற இடங்களில் உள்ள மரங்களே பெரும் அனர்த்தத்துக்கு உள்ளாகியுள்ளன. அனேகமானவை முற்றாக அழிக்கப் பட்டு விட்டன.

இதனால் வழிப்போக்கருக்கு இளைப்பாற நிழல் இல்லை. மரம் அழிந்தால் மழை பொய்க்கும். இதனால் வரட்சி, விளைச்சல் குன்றல் முதலிய பாதக விளைவுகள் ஏற்படும். அதன் பயனாகக் கால நிலை மாற்றம் உண்டாகும். எதிர்கால மக்களின் நலன்கருதி மரம் வெட்டும் சமூக, இயற்கை விரோதச் செயலைத் தடுக்க வேண்டும். இயன்றளவு குறைக்க வேணும். சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைஎடுப்பார்களாக.

''காடழிந்தால் நாடழியும்
மரத்தை மனிதன் அழித்தால்
மனிதனை மரமே அழிக்கும்.

கரவெட்டி. துரை. சீலன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

15 ஆயிரம் வெற்றுச்சாக்குகள், உரப்பை ஆகியன விற்பனைக்குண்டு. தங்கள் விலையைக் குறிப்பிட்டு 31-7-96க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் — வ. து., 291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/2655)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: A. J. சாள்ஸ், 5/4, அச்சுக்கூட ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (41935)

வீட்டிற்குரிய சகல தளபாடங்களும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம். தொடர்பு: K.V. சாமி, மே/பா, கிவீ போட்டோ, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (41928)

### தவறிவிட்டது

சேனாதிராஜா சிறிதரன் ஆகிய எனது 700942805 V இலக்கமும், சுழிபுரம் தெற்கு சுழிபுரம் என்ற விலாசமுடையதுமான தேசிய அடையாள அட்டை 12-06-96 அன்று யாழ். இந்துக் கல்லூரிக்கும், சத்திர சந்திக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கல்யாணி கிறீம் கவுஸில் ஒப்படைக்கவும். (41938)

நவரத்தினம் பரமேஸ்வரன் (கீரிமலை, காங்கேசன்துறை) என்பவருடைய இராணுவத்தால் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டை கடந்த திங்கட்கிழமை நெல்லியடிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். பொது சன நூலகத்திலோ, பெட்டா எசன்ஸ்சப்ளையர்ஸ்இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ தயவு செய்து ஒப்படைக்கவும். அல்லது அனுப்பி வைக்கவும். (41942)

### வாங்கவும் விற்கவும்

பழைய பாடசாலை புத்தகங்கள், தமிழ், ஆங்கில நாவல்கள், சஞ்சிகைகள், மற்றும் சகல புத்தகங்கள் நியாயமான விலையில் வாங்கவும், விற்கவும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- பாலன் புத்தக நிலையம், 87, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். (வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அருகாமையில்) (41916)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா வாத நோய்கள், வலிப்பு நோய், மாதவிடாய் குத்து, குழந்தை வைத்தியம், மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (41747)

### தேவை

அச்சகத்தில் வேலை பழக ஆர்வமுள்ள இளைஞர் தேவை. நேரில் வரவும். தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (41932)

### ஆனந்தம் சீயாக்காய்

சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் சிரசின் தனித்துவத்தை பேணுகிறது. கேட்டு வாங்கி பயன் பெறுங்கள். தயாரிப்பாளர்கள்: ஸ்ரீ சச்சிதானந்தா களஞ்சியம், ஆசிரம அருகாமை கைதடி. (41934)

### ஆட்கள் தேவை

சலூன் வேலைக்கு ஆட்கள் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சி. சிவலிங்கம் இல. 1009, துண்டிவீதி, கொழும்புத்துறை. (41933)

### வீடு வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பஸ் நிலையத்திற்கும், யாழ். பல்கலைக்கழகத்திற்குமிடையில் அமைந்த 5 அறைகள், 2வரவேற்பு மண்டபம், 2 குளியலறைகள், 2 மலசல கூடங்கள், தனியான கிணறு ஆகிய சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்கு உண்டு. மே/பா. 506, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (41946)

## QUICK PHOTO
## மீண்டும் யாழ். நகரில் ஆரம்பம்

மணிக்கூட்டு வீதி, யாழ். நகரில் இருந்த எமது ஸ்தாபனம் கீழ்க் காணும் முகவரிகளில் தற்காலிகமாக இயங்குகின்றது.

கலர்ப்படச் சுருள்களை கழுவ விரும்புபவர்களும், எமது வாடிக்கையாளர்களும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அஜந்தா**
போட்டோ & வீடியோ,
63, சங்கிலியன் வீதி.
நல்லூர்.

**தவமணி**
மான் ஸ்கூல் லேன்,
உடுவில்.

(41857)

## புதியகலை வர்த்தகக் கல்லூரி
## (N. C. C. A.)
(வெலிங்டன் சந்தி அருகாமை — யாழ்)

**A/L 98 (கலை - வர்த்தகம்)**

ஆரம்பம்: **27-7-96** (காலை 8 மணி)

(எமது வழமையான ஆசிரியர் குழு)

★ முன்கூட்டியே அனுமதிகளை பதிவு செய்து கொள்ளவும்.

நிர்வாகம்

(41903)

## மெய்யியல் விரிவுரைகள்

யாழ்ப்பாண, பேராதனை பல்கலைக்கழக
- ★ கலைமுதற் தேர்வு G. A. Q.
- ★ கலைமாணி பகுதி I B. A. PART I
- ★ கலைமாணி பகுதி II B. A. PART II


மீண்டும் **27-07-96** காலை **9** மணிக்கு ஆரம்பமாகின்றது

விரிவுரையாளர்: திரு. வே. யுகபாலசிங்கம் M.A.

பட்டப்படிப்புகள் கல்லூரி
74, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(41936)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அரும்பு: 06 — 10 — 1939

உதிர்வு: 06 — 08 — 1995

## அமரர் இளையதம்பி பூவிலிங்கம்
(நடத்துநர் வ. பி. போ. சபை)

திதி: 25 — 07 — 96

பாசத்தைப் பொழிந்து அன்பாக வளர்த்திட்டு
நேசமுடன் ஒரு வார்த்தை கூறாது
எம்மைத் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்
ஆண்டு ஒன்று சென்றாலும் ஓயவில்லை எம் துயரம்

உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் துயரால் வாடும்;
மனைவி, பிள்ளைகள்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(41917)

## கிறிஸ்தவ சிறுவர் நிதியம்
கனடா
## CHRISTIAN CHILDREN'S FUND OF CANADA

தென் இந்திய திருச்சபை காரியாலயத்தினூடாக மேற்படி உதவிகளை ஏற்கனவே பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் ஜூலை **29** ஆம், **30** ஆம் திகதிகளில் காரியாலயத்திற்கு தவறாது சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

திட்டப் பணிப்பாளர்
கனேடிய சிறுவர் நிதியம்

ஆதீன காரியாலயம்
வட்டுக்கோட்டை.

(சி-2654)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு வைரவர் கோயிலுக்கு அருகாமையில் கண்டி வீதிக்கு அண்மையில் 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

**J S. T.** (ஜெ. சு. தா).
15, கண்டி வீதி, கோட்டடி,
சாவகச்சேரி.

(41949)

### மீண்டும் நகர் மத்தியில்
## அருண் கல்வி நிலையம்
கண்டி வீதி, (ஜெயா ஸ்ருடியோ அருகில்) சாவகச்சேரி

**A/L 97, 98 கலை வகுப்புகள்**

ஆரம்பம்: **28-07-96** ஞாயிறு
காலை 9 மணி (8 மணி)

வழமையான ஆசிரியர் குழு

★ A/L 98 மாணவர்களுக்கு, ஆசிரியர் திரு. கமலநாதன் அவர்கள் எமது நிறுவனத்தில் மட்டுமே வகுப்புக்களை நடத்துவார். அத்துடன் எமது நிறுவனத்தில் கல்வி கற்ற A/L 97 மாணவர்களுக்கு மீண்டும் எமது நிறுவனத்தில் வகுப்புக்களை நடத்துவார்.

(41948) நிர்வாகி

## N·C·A கல்வி நிறுவனம்

1 ஆம் கட்டை, பருத்தித்துறை

## நெல்லியடி சயன்ஸ் அக்கடமி
**A/L 98 விஞ்ஞானப்பிரிவு**

| | | |
|---|---|---|
| தூய கணிதம் / பிரயோக கணிதம் | — | திரு. அருளானந்தம் |
| பௌதிகம் | — | திரு. சந்திரப்பிரகாசம் |
| இரசாயனம் | — | திரு. தங்கராஜா |
| தாவரவியல் | — | திரு. குணசீலன் |
| விலங்கியல் | — | பிரபல ஆசிரியர் |

ஆரம்பம்: **27 — 07 — 96**
(பழைய நேரம்) காலை **8** மணி

(41946)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 25 — 03 — 1978



ஆண்டவன் அடியில்: 24 — 02 — 1996

## கந்தையா இராஜேஸ்வரன்
(யா/ஸ்ரீ/சோமாஸ் கந்தக்கல்லூரி க.பொ.த. உயர்தர மாணவன் 1997 கலைப்பிரிவு)

குடும்பத்தின் குலவிளக்கே நாம்
குதூகலமாய்த் திரிந்தோமே
கொடியவர்கள் சோதனையால் - உன்னை
ஆண்டவனே அழைத்துவிட்டான்
ஆறுமாதமென்ன அறுபது ஆண்டானாலும் - உன்
பால் முகம் என்றுமே எம்மனதில் நிற்குமடா!

தகவல்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

சு. கந்தையா,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

(41944)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## நிம்மதியாக வாழ முடியுமா?

கொழும்பு நகரில் செவ்வாய் தொடக்கம் மூன்று நாள்களுக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இனப்போர் தீவிரமடைவதற்குக் காரணமாக இருந்த கறுப்பு ஜூலை இடம்பெற்று பதின்மூன்று வருடங்கள் ஆகின்றன. அதனையொட்டி கொழும்பில் வன்செயல் நடக்கலாம் என்று அஞ்சியே பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகள் எனச் சொல்லப்படுகிறது.

அது ஒரு புறமிருக்க, இந்த மூன்று நாள் ஏற்பாடுகளுக்கு முன்னதாகவே அங்கு தேடுதல், கண்காணிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. தேடுதல், சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது தமிழர்களைக் கண்டபடி கைது செய்வதும், காவலில் வைப்பதும், அவர்களைப் பலவித சித்திரவதைகளுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாக்குவதும் நீண்டகால வழக்கமாகி விட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிக் காலத்தில் தொடங்கிய இந்த அவலம், இடைவெளி இன்றிக் குறைவின்றித் தொடர்கிறது.

இப்போது அதற்கும் மேலதிகமாக கொழும்பு நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள பொலீஸ் நிலையங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்வதற்குச் செல்லும் தமிழ் இளைஞர்களும் பெரும் இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

வடக்கு - கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலிருந்து கொழும்பு செல்லும் தமிழ் இளைஞர்கள் தமது உறவினர்களுடனோ, நண்பர்களுடனோ தங்குவதாயினும், விடுதிகளில் தங்குவதாயினும் தமது பெயர்களைப் பொலீஸில் பதிவு செய்ய வேண்டும்.

அந்த விதிக்கு மதிப்பளித்து சட்டத்துக்கு அமைந்து ஒழுகும் பிரசைகளாகத் தமது பெயர்களைப் பதிவு செய்வதற்காகப் பொலீஸ் நிலையங்களுக்குச் செல்லும் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் ஒவ்வாத வேண்டாத சிரமங்களுக்கும், கஷ்டங்களுக்கும் ஆளாக நேரிடுகிறது.

இந்த அநியாயம் குறித்து மட்டக்களப்பு எம். பி, திரு ஜோசப் பரராஜசிங்கம் பொலீஸ் மா அதிபருக்கு முறைப்பாடு செய்திருக்கின்றார்; ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றார்.

தமிழர்— தமிழ்இளைஞர்— கைது, காவல், சித்திரவதை, முழு அளவிலான மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து ஏற்கனவே பல தடவைகள், பொலீஸாருக்கு மட்டுமன்றி ஜனாதிபதி ஈறான உயர் மட்ட அரசியல் அதிகாரத் தலைவர்கள் வரைக்கும் பலராலும் முறைப்பாடு செய்யப்பட்டு விட்டது

ஆனால் தமிழ் இளைஞர்கள் மனிதப் பிறவிகளாக அன்றி மாக்களாகக்கருதி துன்புறுத்தப்படும் நிலை இன்னும் நீங்கவில்லை.

இத்தகைய ஒரு பின்னணியில், தமிழர்கள் ஏனைய இனத்தவர்களைப் போல சுயமரியாதையுடனும், கௌரவத்துடனும், சமமான பிரசைகளாகவும், நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழக் கூடிய ஓர் அரசியல் சூழ்நிலை உருவாகும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்; நம்ப முடியும்?

தமிழர்களாகப் பிறந்ததே குற்றம். அவர்கள் சந்தேகத்துக்கு உரியவர்கள் என்ற நிலை தொடரும் வரை அவர்கள் சுதந்திர மனிதர்களாக, நிம்மதியாக வாழ்வது எப்படி?

# அரியாலை கிழக்குப் பகுதியில் மக்கள் மீண்டும் வசிக்க அனுமதி

### அரச அதிபரின் முயற்சி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 25

அரியாலை கிழக்குப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் தமது வீடுகளுக்குச் சென்று வாழ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரியாலை கிழக்குப் பகுதியில் வாழ்ந்த குடும்பங்கள் கடந்த நவம்பர் மாதம் இடம்பெயர்ந்த பின்னர் மீளவும் ஏப்ரல் மாதம் திரும்பிய போதும் அங்கு அவர்கள் வசிக்க இராணுவத்தினர் அனுமதி மறுத்திருந்தனர்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் இராணுவ பிரிகேடியருடன் நடத்திய பேச்சையடுத்து அந்தப்பகுதியில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதே வேளை— அரியாலை கிழக்குப் பகுதியில் விவசாயப் பணிகளில் ஈடுபடுபவர்கள் பிரிகேடியரின் அனுமதி பெற்று விவசாயப் பணியில் ஈடுபடலாம் என அரச அதிபர் தெரிவித்தார்.

(இ-3-4)

## இடம்பெயர்ந்தோருக்கு உதவ 10 நிவாரண கிளைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க எல்லைக்கு உட்பட்ட இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்களை வழங்க 10 நிவாரணக் கிளைகள் பல்வேறு பகுதிகளிலும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய், நல்லூர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இடம்பெயர்ந்து வாழ்பவர்களுக்கு நிவாரணம் வழங்கவே இந்தக் கிளைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் — தாவடி, றொட்டிலாலடி, மயிலணி ஆகிய இடங்களிலும் —

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் — சீரணி, மானிப்பாய் ஆகிய இடங்களிலும் —

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சித்தங்கேணியிலும் —

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் — இணுவில் சந்தி, பரமேஸ்வராச் சந்தி ஆகிய இடங்களிலும்—

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்— உரும்பராய் சந்தி, இருபாலை ஆகிய இடங்களிலும்— இக்கிளைகள் திறக்கப்பட்டுள்ளன.

(இ-3)

### ஒய்வூதியர் சம்மேளன கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை. 25

வடமாநில ஓய்வூதியர்கள் சங்கங்கள் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணிக்கு(பழையநேரம்) கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க காரியாலயத்தில் நடைபெறும். (இ)

## இலங்கையில் 1 லட்சம் பேர் போதைவஸ்து உபயோகம்

கொழும்பு, ஜூலை 25

இலங்கையில் ஒரு லட்சம் பேர் போதைவஸ்து உபயோகிக்கின்றனர்.

போதைவஸ்து துஷ்பிரயோகத்தால் இலங்கையின் மனிதவளம் மாத்திரம் அல்ல உற்பத்தி வினைத் திறனும் கணிசமான அளவு பாதிக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு பொலீஸ் பதிவேட்டுப் பதிவுகளின் படி போதைவஸ்துக் குற்றத்துக்காக 13 ஆயிரத்து 488 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் பெண்களும், 15 வயதுக்கு உட்பட்ட ஆண்களும் அடங்குவர். (இ-3)

# முல்லைத்தீவுசண்டையின்விளைவாக அமைதி முயற்சியும் செத்து விட்டது

### 'லண்டன் ரைம்ஸ்' தலையங்கம்

லண்டன் ஜூலை 25

''முல்லைத்தீவு தளத்தில் இறந்த இராணுவ வீரர்களுடன் இலங்கையில் அமைதி முயற்சி வெற்றி பெறும் என்ற நம்பிக்கையும் சேர்ந்து செத்துப்போய் விட்டது.

— பிரிட்டனில் இருந்து வெளியாகும் ''ரைம்ஸ்'' என்ற நாளேடு தனது தலையங்கத்தில் இவ்வாறு தெரிவிக்கிறது.

அது மேலும் தெரிவித்திருப்பதாவது;

இலங்கைக்கு ஏதாவது நம்பிக்கை அளிக்கக்கூடியது என்றால் அது இன்னமும் ஜனாதிபதி சந்திரிகாவின் அமைதித் திட்டமே.

முல்லைத்தீவு தளத்தில் நடந்த சம்பவங்கள் அரசியல் ரீதியாகவும், படைத்துறை ரீதியாகவும் பெரும் கெடுதல் விளைவித்துள்ளன.

அத்துடன் புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு விட்டாலும், தமது படைத்துறையாற்றல் மழுங்கடிக்கப்படாமல் இருக்கின்றன என்பதை நிரூபித்து மிகப்பெரிய ஓர் உளவியல் வெற்றியையும் அவர்கள் பெற்றுள்ளனர்.

வரலாற்றில் தமிழ்ப் புலிகளின் தாக்குதலுக்கு மிக நெருக்கமாக ஒப்பிடக் கூடிய தாக்குதல் 1968 இல் வியட்நாமில் வியட்கொங் கெரில்லாக்கள் நடத்திய தாக்குதல் ஆகும்.

அது படைத்துறையில் வெற்றி தோல்வியை முடிவு செய்ய முடியாத ஒரு தாக்குதல். ஆனால் சைகோனின் படை வீரர்களின் உள்ளத்தில் பெரும் பாதிப்பை அது உண்டுபண்ணியது.

1968 இல் வியட்கொங் கெரில்லாக்கள் செய்தது போல, தாங்கமுடியாத ஆட்சேதங்களுக்கு தாங்கள் உட்பட்டாலும், தமக்கு சந்திரிகா விரித்த அரசியல் பொறியில் சிக்காமல் புலிகள் குதித்துப் போய் விட்டார்கள்.

முல்லைத்தீவில் இராணுவத்துக்கு ஏற்பட்ட தலைகுனிவு ஜனாதிபதியின் மானசீக அமைதித் திட்டத்துக்கு எதிர்ப்புகளை அதிகரிக்கச் செய்யும்.

அமைதித் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற, ஜனாதிபதி மாதக் கணக்காக கடும் முயற்சி செய்கிறார்.

வடக்கு - கிழக்கு கூடுதல் தன்னாட்சியுடன் கூடிய ''பல மாகாணங்களின் ஒன்றியம்'' என்ற இந்தத் திட்டத்தை சிங்களப் பெரும்பான்மை மக்களை ஏற்கச் செய்வதற்கு தமிழ்ப் புலிகள் முற்று முழுதாக தோற்கடிக்கப்பட்டு விட்டனர் என்று அவர் நிரூபித்தாக வேண்டும்.

சென்ற ஆண்டில் யாழ்ப்பாணம் வீழ்ச்சி அடைந்ததால் திறக்கப்பட்ட அரசியல் சாளரம் இப்போது நிச்சயமாக மூடப்பட்டு விடும்.

வடக்கு—கிழக்கு கூடுதல் தன்னாட்சியுடன் கூடிய மாகாணங்களின் ஒன்றியம் பொருத்தமானது. ஆனால் புலிகளின் பிடி உடைக்கப்படும் வரை அது ஆபத்தானது எனக் கூறி அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுடன் இராணுவமும் இணைந்து கொள்ளும்.

இது வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழர்களுக்கு கேடாகும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

### 5 இடங்களில் கல்விக் கல்லூரி

யாழ்ப்பாணம் உட்பட ஐந்து இடங்களில் புதிதாகக் கல்விக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு கல்வி, உயர்கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது கல்விக் கல்லூரிகள் அமைக்கப்படாத மாகாணங்களின் நகர்களிலேயே இவை அமையவிருக்கின்றன.

## மேலும் 500 ஆசிரியரை நியமிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 25

மேற்கத்திய இசை, அழகியல் கல்வி, விவசாயம், மனையியல், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களைப் போதிப்பதற்காக 500 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் புதிதாக சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

இவர்களுக்கான போட்டிப் பரீட்சை ஏற்கனவே முடிவடைந்துள்ளது.

நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவுகள் நடைபெறும்.

கல்விச் சேவைகள் சபை அழகியல் கல்விக்காக 76 ஆசிரியர்களை நியமிப்பதற்கு நேர்முகப் பரீட்சைகளை நடத்தி வருகிறது.

மனையியல் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகளை மாகாணசபை நடத்தவுள்ளது. (இ-3)

### இன்னும் சில தினங்களில்

## யாழ்ப்பாணத்துக்கு நேரடித் தொலைபேசி

கொழும்பு, ஜூலை 25

இன்னும் சில தினங்களில் யாழ்ப்பாணத்துக்கு நேரடித் தொலைபேசி வசதி கிடைக்கும் என்று ரெலிகொம் நிறுவனத்தின் வடக்கு — கிழக்கு முகாமையாளர் எஸ். கனகசூரியர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேரடித் தொலைபேசி வசதியை வழங்குவதற்காக 50 அடி கோபுரம் ஒன்று நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோபுரம் ''ரெலன்குலர் மாஸ்டர்'' என்ற வகையை உடையதாகும்.

யாழ்ப்பாணத்துக்குத் தொலைபேசி வசதியை வழங்குவதற்காக மன்னார் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தில் இருந்து ஐந்து இலக்கங்கள் புதிதாக ஒதுக்கப்பட்டுள்ளன.

(இ-3)

### பங்கீட்டுக்கு சன்லைட்

வடமராட்சி, ஜூலை 25

குடாநாட்டிலுள்ள வர்த்தகத் திணைக்கள கிளைகளில் ஒரு கட்டி சன்லைட் 9 ரூபா 50 சதப்படி பங்கீட்டுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

(இ-173)

### வலிகாமம் தெற்கில் உதவிப் பணம்

## 3 மாதக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது

வலிகாமம்தெற்கு, ஜூலை 25

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் வாழும் அரசாங்க மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் உபதபாற்கந்தோர்கள், தபாற்கந்தோர்கள் மூலம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் இருந்து மாதாந்த உதவிப்பணம் பெறுவோரை உடனடியாகத் தாம் முன்னர் பெற்று வந்த தபாலகங்களிலோ, உபதபாலகங்களிலோசென்றுபெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் திரு ஆ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

வலிகாமம் தெற்கு பகுதியை சேர்ந்த மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் இடம் பெயர்ந்து வேறு பிரிவுகளில் வாழ்ந்தால் அந்தந்தப் பகுதி பிரதேச செயலர் பிரிவுகளில் தமது பெயர் விலாசங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும்—

சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களின் விவரம் கிடைக்கப்பெற்றதும் மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவுகளை அவர்கள் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

(இ-152)

### வாழைப்பழம் விலை உயர்வு

கொழும்புத்துறை, ஜூலை 25

யாழ், குடா நாட்டில் என்றுமில்லாதவாறு வாழைப்பழம் விலை அதிகரித்துள்ளது.

கதலிப்பழம் கிலோ 80 ரூபாவாக விற்கப்பட்டு வருகிறது. இதரைப் பழத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

(இ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பப்பட்டனர் என்றும் —

நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது விமானப்படையினரின் 'எம். ஐ. 24' ரக ஹெலிக்கொப்டர்களும் 'கிபிர்' யுத்த விமானங்களும் தாக்குதல் நடத்தியதாகவும் அறிவிக்கப்பட்டது.

முகாமை நோக்கி முன்னேறி வரும் மீட்புப்படை அணியின் ஒரு பகுதியினர் முகாமுக்குள் நுழைந்து விட்டனர் என்றும்

அங்கு வெறும் சடலங்களையே அவர்கள் கண்டனர் என்றும் —

திருகோணமலையில் உள்ள இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி 'ரோய்ட்டர் செய்தி நிறுவனம் நேற்று தெரிவித்தது. (உ-3-4-10)


# நியூட்டன் கல்வி நிலையம்

82, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 98

### விஞ்ஞான, கலை, வர்த்தகம்

(யாழ். முன்னணி பட்டதாரி ஆசிரியர் குழு)

ஆரம்பம்:- **28-07-96** ஞாயிறு மு.ப. 8 மணி

அனுமதிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
மாதாந்த கட்டணம் **160/-** மட்டுமே.
முன் கூட்டியே அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.

(41957)

# D. M. I.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 98 பிரிவு I

ஆரம்பம்: **28-7-96** ஞாயிறு காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. இராஜேஸ்வரன் |
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| வணிகப் | | |
| புள்ளிவிபரவியல் | — | திரு. தவசேகர் |
| அளவையியல் | — | திரு. R.P. சர்மா |
| கிறிஸ்தவம் | — | திருமதி மல்லிகா |
| தமிழ் | — | திரு. பாலா |
| இந்துநாகரிகம் | — | திரு பாலா |
| இந்துசமயம் | — | திரு. சிவானந்தன் |
| புவியியல் | — | திரு. இக்னேஸ்சியஸ் |
| நாடகமும் | | |
| அரங்கியலும் | — | திரு. சந்திரன் |

★ பிரிவு I இற்கான அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

## A/L 96, 97

பிரிவு I, பிரிவு II நடைபெறுகின்றன.

(41955)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

ஆவரங்கால் சிவன் கோவில் ஒழுங்கையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் 24-07-96 ல் காலமானார். இவர் கதிராசிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தனகரெத்தினம் (கணக்காளர் -சவூதி), விக்கினேஸ்வரன் (சுவிஸ்), கைலநாயகி, கோகிலநாயகி, லோகநாயகி (கனடா), மனோகரன், இந்துநாயகி (லண்டன்), கிருபானந்தன் (லண்டன்), தர்மசீலன் (ஜேர்மனி), தவபாலன் ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், விமலாதேவி, (சவூதி), விஜயகுமார் (சுவிஸ்), முருகமூர்த்தி (தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்), சிறிகுமரன் (ப. நோ. கூ. சங்கம், அச்சுவேலி), பாஸ்கரன் (கனடா), யோகசிவம் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், பிரணவன், மாதினி, ரகுபரன், துளசிகரன், சபிதா, ராகுலன், பார்த்திபன், ஜெனா, நிருசனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (25-07-96) வியாழக்கிழமை காலை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
சு மனோகரன் (செல்வம்)
(மகன்)

சிவன் வீதி,
ஆவரங்கால்.

(41956)

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 25-07-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### யுத்தத்துக்கு அதிக செலவு அதனால்

# நிவாரண உதவியை குறைக்க அரசு முடிவு

## ஜனாதிபதி அறிவிப்பு

நாட்டின் வருங்காலத்தைக் கருத்தில் கொண்டு அடுத்த ஒரு வருட காலத்தில் சில நிவாரண நடவடிக்கைகளைக் குறைக்க வேண்டியிருக்கின்றது: நாட்டுக்காக நாம் சில தியாகங்களைச் செய்யவேண்டியிருக்கின்றது.

— இவ்வாறு கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

சிறு தேயிலைத் தோட்டச் சொந்தக்காரரர் அபிவிருத்தி அதிகார சபையின் இருபதாவது ஆண்டுப் பூர்த்தியைக் குறிக்கும் முகமாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடந்த தேசிய மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நாடு இன்று தீர்க்கமான கட்டத்தை அடைந்திருக்கிறது. —

தற்போதைய வசதிகளை அனுபவித்துக் கொண்டு வாழ்வதா? அல்லது நாட்டின் வருங்காலம் பற்றிச் சிந்திப்பதா? என்பது பற்றி தீர்மானித்துக்கொள்ள வேண்டிய நேரம் இது.

இலங்கை போன்ற நாடு ஒன்றினால் யுத்தத்துக்குப் பெரும் தொகைப்பணம் செலவிடப்படுவதை தாங்கிக் கொள்ள முடியாது.

ஆதலினால் யுத்தத்தை அடுத்த ஆண்டளவில் முடித்துக் கொண்டு சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான திடசங்கற்பத்தை நாம் பேண வேண்டியிருக்கிறது:

நாட்டின் தேசிய வருமானத்தில் 15 சதவீதத்துக்கும் அதிகமான தொகை — அதாவது வரவு - செலவுத் திட்டத்தில் 25 சதவீத நிதி — யுத்தத்துக்குச் செலவிடப்படுகின்றது

1995 ஆம் ஆண்டில் யுத்தச் செலவீனம் 3 ஆயிரத்து 800 கோடி ரூபாவாக இருந்தது. இந்த ஆண்டில் இது 4 ஆயிரத்து 800 கோடி ரூபாவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பெருந் தொகையான பணம் செலவிடப்படுகின்ற போதிலும் அரசாங்கம் மக்களுக்கு பல்வேறு நிவாரணங்களை வழங்கி வருகிறது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது நாட்டில் எவ்வாறு நிவாரணங்கள் குறைக்கப்பட்டன என்பதை மக்கள் அறிய வேண்டும்.

முன்னைய அரசாங்கம் போலவே தற்போதைய நிர்வாகம் யுத்தம் மூலம் பயங்கரவாதிகளுக்கு எதிரான போராட்டத்தை நடத்துகின்றது.

இத்தகைய நிலையில் நாட்டின் வருங் காலம் பற்றிச் சிந்தித்து அரசாங்கம் அடுத்த 12 மாதங்களில் சில நிவாரண நடவடிக்கைகளைக் குறைக்க வேண்டியிருக்கிறது.

நாட்டின் சார்பில் ஒரு குழுவினர் தமது உயிரைத் தியாகம் செய்து சண்டையிடும் போது, நாமும் சில தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது.

சம்பள அதிகரிப்பு அடங்கலாக தமது கோரிக்கைகளை சகலரும் பின்போட்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்— என்று ஜானதிபதி கூறினார்.

## ஓடும் ரயிலில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
செய்யும் பிரிவினரால் அது செயலிழக்கச் செய்யப்பட்டு அகற்றப்பட்டதாகவும் —

மீண்டும் ரயில் புறப்பட்ட போது வேறு இரு குண்டுகள் ரயிலில் வெடித்ததாகவும் —

அந்த ரயிலில் பயணம் செய்த ஒருவர் தகவல் வெளியிட்டார்.

இக்குண்டு வெடிப்புக்குக் காரணம் யார் என்று தெரியவரவில்லை ஆனால் புலிகளே இதற்குச் சூத்திரதாரிகள் என்று ஸ்ரீலங்கா அரசு தெரிவித்துள்ளது.

காயமுற்றோர் அம்புலன்ஸ் மற்றும் ஹெலிக்கொப்டர்கள் மூலம் கொழும்பு மற்றும் களுபோவில உட்பட பல்வேறு ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர்.

குண்டு வெடித்த இடத்தில் நாற்பது பேர் உயிரிழந்தனர்: படுகாயமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டோரில் முப்பது பேர் வரை நேற்று முன்னிரவில் உயிரிழந்தனர்.

இன்று விடியும் போது உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கும் என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர் நேற்று நள்ளிரவில் தெரிவித்தார்.

குண்டு வெடித்த இடத்துக்குச் சென்ற ஏ. எவ். பி. செய்தியாளர் சேன விதானகம —

''இரண்டு ரயில் பெட்டிகள் சிதைந்த நிலையில் கிடந்ததைக் கண்டேன். அவற்றில் ஒன்றில் இருபத்தைந்து முதல் முப்பது பேர் உருக்குலைந்து இறந்த நிலையில் கிடந்தனர்'' என்றார்.

(உ-3-10)

## செய்தியாளர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
வல்களை வெளியிட்டுவருகின்றது. அது குறித்து உண்மையைக் கூறுங்கள்.''

— இவ்வாறு பத்திரிகையாளர்கள் கூட்டமாக அமைச்சரிடம் கோரியதாக அப்பத்திரிகையாளர் மேலும் தெரிவித்தார். (உ-4)

## அமைதியை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாத்திரம் ஈடுபடவில்லை தென் பகுதியில் உள்ள சந்தர்ப்பவாதிகளும் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்படுவதைக் கண்டுகளிக்கக் காத்திருக்கின்றனர். இவர்களின் நோக்கங்களை மக்கள் நன்கு அறிய வேண்டும்.

தென்பகுதி மக்கள் இவ்வேளையில் உணர்ச்சிவசப்படுவார்களாயின் அது விடுதலைப் புலிகளின் நோக்கம் நிறைவேறவே உதவும். அத்தோடு இராணுவத்தினர் வடக்கில் சம்பாதித்த வெற்றி வீணாகிப் போக நேரிடும்.

ஆகையால் தென்னிலங்கையில் மக்கள் அமைதியை நிலைநாட்டி அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். (அ-10)

## சகல கடை..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
நேரத்தில் வந்து சேராமல் காலதாமதமாக வந்து சேர்வதாலும்—

காங்கேசன் துறையில் பொருள்கள் பெரும் எண்ணிக்கையில் திருட்டுப் போவதாலும்—

பருத்தித் துறை இறங்கு துறையில் இறக்க எடுத்து வரப்படும் பொருள்களைவிட காங்கேசன் துறை துறைமுகத்திலிருந்து இறக்கப்படும் பொருள்கள் குறைவாகக் காணப்படுவதாலும்—

பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது — என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் பொருள்களுக்கு கூடுதல் கப்பல் கட்டணம் அறவிடப்படுவதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் — என்று அரச அதிபர் உறுதி அளித்தார். (அ-3-5)

## முல்லை விவகாரத்தால்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
மக்களுக்கு அரசு தெரிவிக்கவில்லை. அதுபற்றி அறியும் உரிமை மக்களுக்கு இருக்கின்றது.

யுத்தச் செய்திகளுக்கு அரசு விதித்துள்ள தணிக்கையால் மக்கள் உண்மை நிலையை சுயாதீன வட்டாரங்கள் மூலம் கூட அறியமுடியாதிருக்கின்றது. — என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

இச்சமயம் குறுக்கிட்ட தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க, அமைச்சரவை இன்று (புதன்) கூடும் போது இது பற்றி முடிவு எடுக்கப்படும் என்றார்.

ரணிலின் பேச்சுக்குப் பதிலளித்த அரசுத் தரப்பு பிரதம ஹொறாடாவான றிச்சர்ட் பத்திரனா—

''யுத்த முனைக்குச் சென்றுள்ள பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த தலைநகர் திரும்பியதும் அரசு சபையில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்'' — எனப் பதிலளித்தார்.

''முல்லைத்தீவு நிலைமை குறித்து நாளை அறிக்கைவிடுவோம் என்று ஏன் அரசினால் உறுதியளிக்க முடியாதிருக்கிறது''?— அனுரா பண்டாரநாயக்கா கேள்வி எழுப்பினார்.

அப்போது அரச— எதிரணி எம். பிக்களுக்கு இடையில் சூடான வார்த்தைப் பிரயோகங்களும் கூச்சல்களும் இடம்பெற்றன.

காணி விடயங்கள் தொடர்பான விவாதம் நடந்த போதும், எவரும் அதுகுறித்து பேசாமல் முல்லைத்தீவு விடயம் குறித்தே பேசினர்.

முல்லைத்தீவு தாக்குதல் குறித்து பேசவேண்டாம் என்று சபாநாயகர் கே. பி. ரத்நாயக்க பல தடவை கூறியும், அதைப் பொருட்படுத்தாது எதிர்க்கட்சியினர் முல்லைத் தாக்குதல் பற்றியே பேசினார்கள்.

ஐ தே. கவின் எம். பியான கொங்காவே முல்லைத்தீவு விடயம் பற்றி பேசவே, அது பற்றி பேசவேண்டாம் என்று சபாநாயகர் மீண்டும் வற்புறுத்தினர். அதற்கு ''நான் முல்லைத்தீவில் உள்ள காணிகளைப் பற்றியும், அங்கு நடக்கும் சம்பவம் பற்றியும் தான் பேசுகிறேன்'' — என்று எம். பி. பதிலளித்தார்.

அரசதரப்பு எம். பிக்களின் கூச்சல்களுக்கு மத்தியில் ஐ. தே. கவின் எம். பிக்கள் உரத்த குரலில் பேசினார்கள்.

சபையில் நிலவிய அமளி துமளியுடன் சபை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org